# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 90 | 4 Pages | 02.11.2023 | Thusday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 90 | 4 பக்கங்கள் | 02.11.2023 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## ஊழியர்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்த சிட்டாடல் நிறுவனம்



டோக்கியோ, நவ.2

ஜப்பானைச் சேர்ந்த தொழிலதிபர் கென்னத் சி.கிரிபின். சிட்டாடல் என்ற நிதி நிறுவனம், கணினி தொழில்நுட்ப நிறுவனம் உள்ளிட்ட பல தொழில்களை செய்யும் இவர், தனது நிறுவன ஊழியர்களை நிறுவனத்தின் 30வது ஆண்டு விழாவையொட்டி மகிழ்விக்க விரும்பினார்.

அதற்காக சுமார் 1,200 ஊழியர்களை, அவர்களது குடும்பத்தினருடன் 3 நாள் சுற்றுலாவுக்கு இலவசமாக அழைத்து சென்றுள்ளார்.

டோக்கியோ நகரில் உள்ள டிஸ்னிலேண்ட் பொழுதுபோக்கு பூங்கா உள்ளிட்ட முக்கிய சுற்றுலா இடங்களுக்கு அழைத்துச் செல்வது, தங்குமிடம், உணவு என அனைத்து வசதிகளுக்கான செலவையும் அவரே ஏற்றுக்கொண்டார்.

டிஸ்னிலேண்ட் கட்டணம் மட்டும் குறைந்தபட்சம் 88 ஆயிரம் டாலர் இருக்கும் என்று உத்தேசிக்கப்பட்டு உள்ளது. இதன் இந்திய மதிப்பு ரூ.72 லட்சமாகும்.

மொத்த செலவுத்தொகையை அவர் வெளியிடவில்லை. இதுபற்றிய தகவல்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது. இந்தியாவின் குர்கான் நகரில் இருந்து இந்நிறுவன பணியாளர்கள் சுற்றுலா சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ராபா கிராசிங் திறப்பு எதிரொலி: காசாவில் இருந்து வெளியேற காத்திருக்கும் வெளிநாட்டவர்



காசா, நவ.2

இஸ்ரேல் மீது ஹமாஸ் பயங்கரவாதிகள் கடந்த மாதம் 7ம் தேதி திடீரென தாக்குதல் நடத்தினர். அத்துடன் பலர் பிணைக்கைதிகளாக பிடிக்கப்பட்டுள்ளனர். இதற்கு இஸ்ரேல் காசா மீது ஏவுகணைகளை வீசி பதிலடி கொடுத்து வருகிறது. இதனால் இரு பக்கமும் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேல்ஹமாஸ் இடையிலான போரில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 10ஆயிரத்தைநெருங்கியுள்ளது.ஹமாசுக்குஎதிரானபோரில்இஸ்ரேலுக்கு அமெரிக்கா தனது ஆதரவை அளித்து வருகிறது.

இஸ்ரேலின் நெருங்கிய நட்பு நாடான அமெரிக்கா விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கி எகிப்தின் ராபா எல்லை வழியாக காசாவுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க இஸ்ரேல் சம்மதித்தது.

இதையடுத்து, நிவாரணப் பொருட்கள் அடங்கிய லாரிகள் காசாவுக்குள் அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், காசாவில் இருந்து எகிப்து நாட்டின் ராபா எல்லை வழியாகவெளியேறுவதற்காகவெளிநாட்டினர்12பேர்காத்திருக்கின்றனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

போர் தொடங்கிய 3 வார காலத்துக்குப் பிறகு காசாவில் இருந்து வெளிநாட்டவர்கள் வெளியேற அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேலுக்கு எதிரான போரில் ஹவுதி அமைப்பு இணைந்தது



இஸ்ரேல், நவ.2

இஸ்ரேல் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தி உள்ளனர்.

பாலஸ்தீன வெற்றிக்காக இந்த தாக்குதல் தொடரும் என்று ஹவுதி அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. பாலஸ்தீனத்தின் காசா முனை மீது போர் தாக்குதலை நடத்தி வரும் இஸ்ரேலுக்கு எதிராக லெபனானில் செயல்படும் ஹிஸ்புல்லா இயக்கம் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில் இஸ்ரேலுக்கு எதிரான போரில் ஏமனில் செயல்படும் ஹவுதி அமைப்பினரும் களம் குதித்துள்ளனர். அவர்கள் இஸ்ரேல் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தி உள்ளனர். பாலஸ்தீன வெற்றிக்காக இந்த தாக்குதல் தொடரும் என்று ஹவுதி அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

# "விடுதலை போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பு" பற்றிய புத்தகம்: மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்

சென்னை, நவ. 2

"விடுதலை போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பு" பற்றிய புத்தகம்: மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்

"விடுதலை போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பு" (தமிழ் நூல்) மற்றும் *"Tamil Nadu's Contribution to the Freedom Struggle"* (ஆங்கில மொழி பெயர்ப்பு நூல்) ஆகிய சிறப்பு மலர்கள் வெளியிடப்பட்டது.

சிறப்பு மலர்களை வெளியிட மேற்கு வங்க முன்னாள் கவர்னர் கோபாலகிருஷ்ண காந்தி பெற்றுக் கொண்டார்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் 'தமிழரசு' சார்பில் தயாரிக்கப்பட்டுள்ள "விடுதலை போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்களிப்பு" (தமிழ் நூல்) மற்றும் *"Tamil Nadu's Contribution to the Freedom Struggle"* (ஆங்கில மொழி பெயர்ப்பு நூல்) ஆகிய சிறப்பு மலர்களை வெளியிட மேற்கு வங்க முன்னாள் கவர்னர் கோபால கிருஷ்ண காந்தி பெற்றுக் கொண்டார்.

# சிவன்மலை கிரிவலப்பாதையில் 8 கிலோ மீட்டர் தூரம் நடைபயிற்சி முன்னேற்பாடு பணிகள் தொடர்பாக நடைபெற்ற ஆலோசனைக்கூட்டம்

திருப்பூர், நவ.2

மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், திருப்பூர் மாவட்டம், காங்கயம் வட்டம், சிவன்மலை கிரிவலப்பாதையில் 04.11.2023 (சனிக்கிழமை) அன்று "நடப்போம் நலம் பெறுவோம்" எனும் 8 கிலோ மீட்டர் தூரம் நடைபயிற்சி (Health Walk) நடைபெறவுள்ளதையொட்டி முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் தா. கிறிஸ்துராஜ் தெரிவித்ததாவது,

திருப்பூர் மாவட்டம், காங்கயம் வட்டம், சிவன்மலை கிரிவலப்பாதையில் 04.11.2023 அன்று காலை 6.00 மணிக்கு "நடப்போம் நலம் பெறுவோம்" எனும் 8 கிலோ மீட்டர் தூரம் நடைபயிற்சி (Health Walk) நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொள்கிறார்கள்.

உலக சுகாதார அமைப்பின் தரவுகளின்படி உடற்பயிற்சி செய்வது நீரிழிவு மற்றும் இரத்த அழுத்த நோய்களின் தாக்கம் 28 சதவீதமும், இதய நோயின் தாக்கம் 30 சதவீதமும் குறைகின்றது என்று அறியப்படுகின்றது. நடை பயிற்சியானது மக்களை சுறுசுறுப்பாகவும், ஆரோக்கியமான எடையுடன் இருக்கவும் நாள்பட்ட உடல் பிரச்சினைகள் மற்றும் மன அழுத்தத்தை குறைக்கவும் உதவுகிறது.

எனவே, திருப்பூர் மாவட்டத்தில், நடப்போம் நலம் பெறுவோம் என்பதற்கு இணங்க பொது மக்களின் நலன் மற்றும் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு, எட்டு கிலோ மீட்டர் தூரம் கொண்ட நடை பாதை கண்டறியப்பட்டு, இந்த நடைபாதையானது 4 கிலோ மீட்டர் தூரம் கொண்ட காங்கயம் சிவன்மலை கிரிவலப்பாதையில் 2 முழு சுற்றுகள் சுற்ற 8 கிலோ மீட்டர் தூரம் தொடங்கிய இடத்திலே முடிகின்றது.

ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை உள்ளூர் மக்களுடன் இணைந்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக மாவட்ட அலுவலர்கள், சுகாதாரப்பணியாளர்கள் மற்றும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆகிய அனைவரும் சுகாதார நடைபயிற்சியில் பங்கேற்பார்கள். நடைபயிற்சியின் முடிவில் ஆராக்கியமான வாழ்க்கை மற்றும் நல்வாழ்வு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும் மற்றும் தினந்தோறும் நடைபயிற்சி மேற்கொள்ள ஊக்குவிக்கப்படும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தெரிவித்தார்கள்.

இந்த ஆலோசனைக்கூட்டத்தில், மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர் , மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அ.லட்சுமணன், இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) மரு.கனகராணி, துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.ஜெகதீஸ்குமார், இணைப் பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) சினீவாசன் மற்றும் அனைத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டார்கள்.

# காதை கிழிக்கும் ஹாரன் சத்தம் சத்திரத்தில் வாகனங்களை நிறுத்தி சம்பவம் செய்த ஆர்டிஓக்கள்

திருச்சி, நவ. 2

திருச்சி சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து இயங்கும் தனியார் பேருந்துகள் மற்றும் அரசு பேருந்துகள் அதிரடி சோதனை காட்டிய ஆர்டிஓ அதிகாரிகள் தனியார் பேருந்து காதை கிழிக்கும் ஏர் ஹாரன்கள் அடித்து செல்வதை பொதுமக்கள் தொந்தரவுக்கு உள்ளாக்கி வந்த நிலையில் பேருந்து நிலையத்துக்குள் சென்று தனியார் பேருந்துகளில் பொருத்தப்பட்டிருந்த ஏர் ஹாரன்கள் அதிரடியாக கழற்ற வைத்துள்ளார் வட்டாரப் போக்குவரத்து ஆய்வாளர் குமார் மற்றும் சிவானந்தம் தொடர்ந்து பொது பொதுமக்களிடம் புகார்கள் வந்த வண்ணம் உள்ளன விதியை மீறி பேருந்துகளில் பொருத்தப்பட்டிருந்த ஏர் ஹாரன்களை உடனடியாக கழட்டுமாறு உத்தரவிட்டார்



பேருந்து நிலைய த்தில் ஒவ்வொரு தனியார் பேருந்துகளையும் சோதனை செய்து அதிலிருந்து ஏர் ஹாரன்களை அகற்ற வைத்தார் மேலும் பேருந்து ஓட்டுநர் அடுத்த முறை ஆய்வுக்கு வரும்போது இந்த ஏர் ஹாரணங்கள் பயன்படுத்துவதை எச்சரித்தும் ஆர்டிஓ அவர்கள் மறுமுறை இது போல் தவறு நடந்தால் பத்தாயிரம் வரை அபதாரம் விதிக்கப்படும் என எச்சரித்தார்

இன்னும் சில தனியார் பேருந்துகளை ஓட்டுனர்களை ஹாரன் குறித்து ஆய்வு மேற்கொள்வதே அறிந்து அவர் கண்ணில் படுவதற்கு முன்பாகவே ஹாரன்களை கழற்றிக் கொண்டிருந்தனர் அதைப் பார்த்த ஆர்டிஓ அவர்கள் பொறுமையாக கழட்டுங்க இன்னும் அவசரம் இல்லை என்று தமாசாகவும் கோபமாகவும் கூறினார் மேலும் ஏர் ஹாரன்களை பயன்படுத்தக் கூடாது அடுத்த முறை சிக்கினால் லைசன்ஸ் பறிமுதல் செய்து விடுவேன் என ஓட்டுநரை கண்டிப்போடு எச்சரித்தார் மோட்டார் போக்குவரத்து ஆய்வாளர் குமார் அவர்கள் துணை ஆய்வாளர்கள்செந்தில்குமார்பிரபாகரன் செந்தில் அருண்குமார் முகமது மீரான் உதவியாளர்கள் உடன் இருந்தனர்

# திருப்பூர் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கோமாரி நோய் தடுப்பூசி திட்டத்தின் கீழ் அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி: கலெக்டர் தகவல்

திருப்பூர், நவ.2

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள கால்நடைகள் உயிர் காக்க, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் தேசிய கோமாரி நோய் தடுப்பூசி திட்டத்தின் கீழ் 2023ஆம் ஆண்டு (4வது சுற்று) கோமாரி நோய் தடுப்பூசி நவம்பர் 6 முதல் 21 நாட்களுக்கு அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி செலுத்தப்படவுள்ளது. கிராமப்புற வளர்ச்சி, விவசாயிகளின் கூடுதல் வருவாய் கால்நடைகளை நம்பியே உள்ளது. இக்கால்நடை வளர்ப்பில் கால் மற்றும் வாய் நோய் அல்லது காணை என்றும் அழைக்கப்படும் கோமாரிநோய்வைரஸ்நச்சுயிரியால் ஏற்படுகிறது. பொதுவாக, கலப்பின மாடுகளை, கால் மற்றும் வாய் கோமாரி நோய் அதிகம் தாக்கி, கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம் மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்தும்.

இந்நோயால், கறவை மாட்டில் பால் உற்பத்தி குறையும், சினை பிடிப்பு தடைபடும். எருதுகளின் வேலைத்திறன் குறையும். இளங்கன்றுகளின் இறப்பு சதவீதம் உயரும். அதனால் கறவை மாடுகளுக்கு கோமாரி நோய் தாக்காமல் இருக்க, கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் ஆறு மாதத்திற்கு ஒரு முறை என ஆண்டுக்கு இரண்டு முறை, இலவசமாக அனைத்து கால் நடைகளுக்கும் (பசுவினம் மற்றும் எருமையினம்) 100% தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

அதன்படி நடப்பாண்டு 2023 நவம்பர் 6 முதல் 21 நாட்களுக்கு திருப்பூர் மாவட்டத்தில் உள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கிராமப்புறங்கள், குக்கிராமங்கள் மற்றும் நகர்புறங்களில் உள்ள அனைத்து கால்நடைகளுக்கும், கால்நடை நிலையங்கள் மூலமாக நடைபெறும் முகாம்களில், இலவசமாக தடுப்பூசி செலுத்தப்படவுள்ளது. இந்த வாய்ப்பினை பயன்படுத்தி அனைத்து கால்நடைகளுக்கும் இலவசமாக தடுப்பூசி செலுத்தி பயன்பெறுமாறு விவசாய பெருமக்கள் மற்றும் கால்நடை வளர்ப்போர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விபரங்களுக்கு அருகில் உள்ளகால்நடைமருந்தக,கால்நடை உதவி மருத்துவரை விவசாய பெருமக்கள் / கால்நடை வளர்ப்போர் அணுகலாம் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்கள்.

# பா.ஜனதாவின் "இன்ஸ்டன்ட்" அரசியல் தமிழக மக்களிடம் எடுபடாது: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்



சென்னை:நவ.2

தி.மு.க. இளைஞர் அணி செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின்தனது எக்ஸ்தள பக்கத்தில் இளைஞர் அணியினருக்கு சேலம் மாநாட்டில் பங்கேற்க அழைப்பு விடுத்து அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

சேலத்தில் டிசம்பர் 17ந் தேதி இளைஞர் அணி மாநாடு நடைபெற உள்ளது. இந்த மாநாட்டுக்கு இளைஞர்களை மன ரீதியாக தயார்படுத்தும் வகையில் மாவட்டந்தோறும் சென்று அவர்களை சந்திக்கலாம் என்ற எண்ணத்தில் தொடங்கியது தான் இந்த செயல்வீரர்கள் கூட்டம்.

முதல் கூட்டம் ஆகஸ்ட் மாதம் 9ந்தேதி, காஞ்சிபுரத்தில் நடந்தது. அதனை தொடர்ந்து தேனி, விருதுநகர், நெல்லை, கன்னியாகுமரியில் மிக சிறப்பாக நடந்து முடிந்துள்ளது.

இந்த கூட்டங்களில் தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முட்டுக்கட்டையாக உள்ள பாசிச பா.ஜ.க. அரசையும் அதற்கு உடந்தையாக இருந்து தமிழர்களின் நலன்களை விட்டு கொடுத்த அ.தி.மு.க.வையும் விமர்சித்து பேசி வருகிறேன்.

குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க நினைப்பது தான் பா.ஜனதாவின் அரசியல். அமைதியான தெளிந்த நீரோடை போல் உள்ள தமிழ்நாட்டில் அவர்களால் அரசியல் செய்ய முடியவில்லை. அவதூறு பேச்சு, சாதி, மத துவேசம் போன்ற அழுக்குகளை கொட்டி குளிப்பாட்டி அரசியல் செய்ய நினைக்கிறது.

பல சமயங்களில் அழுக்கை கொட்டும் போதே பிடிபட்டு அம்பலப்பட்டு வருகிறது. சி.சி.டி.வி. காட்சிகளுடன் கையும், களவுமாக பிடிப்பட்டு முகமுடி கிழிக்கப்படுகிறது.

தமிழகத்தில் இன்ஸ்டன்ட்அரசியலில்பா.ஜ.க. ஈடுபடுகிறது. இன்று அவதூறு பரப்பி, நாளையே கோட்டைக்குள் சென்று விட வேண்டும் என்ற வெறி மட்டுமே அவர்களிடம் உள்ளது. பொறுமை இல்லை.

இந்த போலி அரசியல் பயணத்தில் அங்கங்கு இருக்கும் சமூக விரோதிகளை எல்லாம் அள்ளிப் போட்டுக் கொண்டு அரசியல் என்ற பெயரில் மக்கள் விரோத செயலில் ஈடுபட்டு வருகிறது.

தலைமை கழகம் தொடங்கி கடைகோடி கிளைக்கழகம் வரை நம் இயக்கம் மிகப்பெரிய கட்டமைப்பு கொண்டது. இந்த கட்டமைப்பினால் தான் பல இடர்களுக்கு இடையிலும் கட்சி தொய்வின்றி தன்வெற்றி நடைபயணத்தை தொடர்கிறது.

இதே கட்டமைப்பை நாம் அடுத்த தலைமுறைக்கு கடத்தவும், உங்களின் தேவைகளை நிறைவேற்றவும் கழகம் இருக்கிறது என்பதை மக்களுக்கு உணர்த்தவும் தான் இந்த மாநாடு.

பாராளுமன்ற தேர்தலுக்கு முன்பு நடைபெறும் மாநாட்டில் நம் பலத்தை எதிர்க்கட்சிகளுக்கு உணர்த்தவும், நமக்கு துணையாக கழகம் இருக்கிறது என்பதை மக்களுக்கு உணர்த்தவும் இளைஞர்கள் அனைவரும் சேலத்தில் கூட வேண்டியது அவசியம்.

இவ்வாறு கூறி உள்ளார்.




கலெக்டர் கிறிஸ்துராஜ் தலைமையில் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் திருப்பூர் மாவட்டம் காங்கேயம் வட்டம் சிவன்மலை கிரிவலப்பாதையில் நடப்போம் நலம் பெறுவோம் எனும் நடைபயிற்சி நடைபெறவுள்ளதையொட்ட் முன்னேற்பாடு பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.



கலெக்டர் கிறிஸ்துராஜ் திருப்பூர் மாவட்டம் தாராபுரம் ஊராட்சி ஒன்றியம் தொப்பம்பட்டி ஊராட்சி மடத்துப்பாளையம் சமுதாய நலக்கூட வளாகத்தில் உள்ளாட்சிகள் தினத்தினை முன்னிட்டு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறையின் சார்பில் நடைபெற்ற சிறப்பு கிராம சபை கூட்டத்தில் பார்வையாளராக கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

# பல்லடம் அருகே ரூ.52 லட்சம் மதிப்பீட்டில் நலத்திட்டபணிகள் அமைக்க பூமி பூஜை செல்வராஜ் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார்



பல்லடம், நவ. 2

திருப்பூர்மாவட்டம் பல்லடம் அருகே உள்ள சுக்கம்பாளையம் ஊராட்சி பகுதியில் ரூ. 52 லட்சம் மதிப்பிலான கான்கிரீட் ரோடு அமைத்தல், ஆழ்குழாய் கிணறு அமைத்தல், தார் சாலை அமைத்தல் உள்ளிட்ட நலத்திட்ட பணிகளுக்கு பூமி பூஜை நடைபெற்றது. இந்த நலத்திட்ட பணிகளை திருப்பூர் தி.மு.க. வடக்கு மாவட்ட செயலாளரும், திருப்பூர் தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான க.செல்வராஜ் தலைமை தாங்கி, பூமி பூஜையை தொடங்கி வைத்தார். இதில் பல்லடம் தி.மு.க. மேற்கு ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, கிழக்கு ஒன்றிய செயலாளர் சோமசுந்தரம், ஒன்றியக்குழு தலைவர்கள் பல்லடம் தேன்மொழி, பொங்கலூர் வக்கீல் குமார், ஒன்றியக்குழு துணை தலைவர் பாலசுப்பிரமணியம், பல்லடம் நகர மன்ற முன்னாள் தலைவர் பி.ஏ. சேகர், நெசவாளர் அணி தலைவர் எஸ்.கே.டி. சுப்பிரமணியம், சுக்கம்பாளையம்ஊராட்சி மன்ற தலைவர் தண்டபாணி, துணை தலைவர் மருதாச்சலமூர்த்தி, செயலாளர் சுரேஷ் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள் பரமசிவம், துரைமுருகன், அன்பரசன், பூமலூர் தியாகராஜன், அம்மாபாளையம் குமார், ராஜேஸ்வரன் மற்றும் தி.மு.க. நிர்வாகிகள், பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# வெள்ளகோவில் வாரச்சந்தையில் தேங்காய் பருப்பு ஏலம்: ரூ.1.5 கோடிக்கு விற்பனை

வெள்ளகோவில், நவ.2

வெள்ளகோவில் வேளாண் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வாரந்தோறும் செவ்வாய் அன்று தேங்காய் பருப்பும், வியாழன் அன்று சூரியகாந்தி விதையும் ஏலம் நடைபெற்று வருகிறது.

இந்த ஒழுங்கு முறை விற்பனை கூடத்திற்கு வாணியம்பாடி, மூலனூர், கரூர், ஸ்ரீரங்கம், திருச்சி ஆகியபகுதிகளில்இருந்து விவசாயிகள் கலந்து கொண்டு தேங்காய் பருப்புமற்றும்சூரியகாந்தி விதைகளை விற்பனைக்கு கொண்டு வருவார்கள். நேற்று (செவ்வாய்கிழமை) 229 விவசாயிகள் கலந்து கொண்டு 1 லட்சத்து 36 ஆயிரத்து 367 கிலோ தேங்காய் பருப்புகளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், வெள்ளகோவில், காங்கயம், முத்தூர், ஊத்துக்குளி ஆகியபகுதிகளை சேர்ந்த 12 வியாபாரிகள் கலந்து கொண்டு ஒரு கிலோ தேங்காய் பருப்பு அதிகபட்சமாக ரூ. 89.89 க்கும், குறைந்தபட்சமாக ரூ.63.89 க்கும் கொள்முதல் செய்தனர். மொத்தம் ரூ.1 கோடியே 5 லட்சத்து 74 ஆயிரத்து 226 க்கு வணிகம் நடைபெற்றது. இந்த தகவலை வெள்ளகோவில் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சி.மகுடேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

# கொடுவாயில் திடீரென பால்பண்ணை மூடல்: விவசாயிகள் முற்றுகை, பரபரப்பு



பல்லடம்: நவ. 2

திருப்பூர்மாவட்டம் பல்லடம் அருகே உள்ள கொடுவாய், செங்காட்டு பாளையத்தில் தனியார் பால் கொள்முதல் நிறுவனம் இயங்கி வந்தது. இந்த நிறுவனத்தை திருச்சி துறையூரை சேர்ந்த செல்வகுமார், சுந்தரமூர்த்தி மற்றும் கொடுவாய் செங்காட்டு பாளையத்தை சேர்ந்த லோகநாதன் ஆகியோர் நடத்தி வந்ததாக கூறப்படுகிறது.

இந்த நிறுவனத்தில் சுற்று வட்டார கிராம மக்கள்சுமார் 1000 க்கும் மேற்பட்டோர் பால் வழங்கி வந்தனர்.

மேலும் இந்த நிறுவனம் மாத கணக்கில் பால் கொள்முதலுக்கான பணத்தை வழங்காமல் இருந்து வந்துள்ளது. இந்த நிலையில் நிறுவனத்தின் முதலாளிகள் திடீரென தலைமறைவாகியதால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் 500க்கும் மேற்பட்டோர் ஒன்று திரண்டு பால் கொள்முதல் நிறுவனத்தை முற்றுகையிட்டனர். அங்கு ஒரு பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது. இதுகுறித்து தகவல் அறிந்த பல்லடம் துணை வட்டாட்சியர், பல்லடம் காவல் ஆய்வாளர், அவினாசிபாளையம் போலீசார், தெற்கு அவினாசிபாளையம் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து விவசாயிகளோடு பேச்சு வார்த்தை நடத்தினர். இதில் பாதிக்கபட்ட விவசாயிகளுக்கு ஆதரவாக தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் மாநில தலைவர் இரா.சண்முகசுந்தரம், மாநில பொது செயலாளர் முத்து விஸ்வநாதன், திருப்பூர் கிழக்கு மாவட்ட செயலாளர் கோபாலகிருஷ்ணன், மேற்கு மாவட்ட செயலாளர் மகாலிங்கம், மாநகர செயலாளர் ரமேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். பேச்சுவார்த்தையின் முடிவில் தமிழக விவசாயிகள் பாதுகாப்பு சங்கத்தின் சார்பில் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் பேரில் நடவடிக்கை எடுக்கக்கோரி அவினாசிபாளையம் போலீசில் புகார் தெரிவிக்கப்பட்டது. விவசாயிகளுக்கு லட்சக்கணக்கில் பால் பணம் பாக்கி கொடுக்காமல் வைத்துவிட்டு, பால் பண்ணை மூடப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# வெள்ளகோவில் அருகே இந்து சமய அறநிலையத்துறை சார்பில் ஈஸ்வரர் கோவிலில் நில அளவீடு செய்யும் பணி



வெள்ளகோவில், நவ.2

தமிழகம்முழுதும் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் கோவிலுக்கு சொந்தமான நிலங்களை மீட்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். அதன்படி கோவில் நிலங்களின் ஆக்கிரமிப்புகளை அகற்றி, அளவீடு செய்யும் பணியை மேற்கொண்டு, கையகப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் திருப்பூர் இந்து சமய அறநிலையத்துறை மண்டல இணை ஆணையர் குமரத்துரை, வட்டாட்சியர் ஆலய நிலங்கள் ரவீந்திரன் மற்றும் வெள்ளகோவில் வீரக்குமாரசாமி கோவில் செயல் அலுவலர் எஸ்.ராமநாதன் மற்றும் சர்வேயர்கள் இணைந்து துரம்பாடி கிராமத்தில் உள்ள குலமாணிக்க ஈஸ்வரர் கோவிலுக்கு சொந்தமான 168 ஏக்கர் நிலங்களை அளவீடு செய்யும் பணியில் ஈடுபட்டனர். இதனுடைய தற்போதைய மதிப்பு பல கோடி ரூபாய் இருக்கும் என கூறப்படுகிறது.

# பல்லடம் நகராட்சி பள்ளிகளில் ரூ.80 லட்சத்தில் நவீன கழிப்பிட வசதிகள்: நகராட்சி தலைவர் தகவல்




பல்லடம், நவ.2

திருப்பூர்மாவட்டம் பல்லடம் நகராட்சி மன்ற கூட்டரங்கில் நகராட்சி கூட்டம் நடந்தது. இதற்கு தலைவர் கவிதாமணி ராஜேந்திரகுமார் தலைமை தாங்கினார். இதில் ஆணையாளர் முத்துசாமி, பொறியாளர் சுகுமார், சுகாதார அலுவலர் செந்தில்குமார், நகரமைப்பு அலுவலர் ரவிச்சந்திரன், நகரமைப்பு ஆய்வாளர் வரதராஜன், சுகாதார ஆய்வாளர்கள் சங்கர், சத்திய சுந்தர்ராஜ், பணி மேற்பார்வையாளர் ராசுக்குட்டி, வருவாய் ஆய்வாளர் நந்தினி பாக்கியராஜ் உள்பட பலர்கலந்து கொண்டனர். இதுகுறித்து நகராட்சி தலைவர் கவிதாமணி ராஜேந்திரகுமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது: பல்லடம் நகராட்சி பகுதியில் உள்ள அண்ணா நகர், கொசவம்பாளையம், கல்லம்பாளையம், சேடபாளையம், பி.டி.ஓ.காலனி, ராயர்பாளையம், பல்லடம் கிழக்கு, பல்லடம் மேற்கு ஆகிய8நகராட்சிதொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் தண்ணீர் வசதியுடன் ரூ.80 லட்சம் மதிப்பில் மாணவ மாணவிகள், ஆசிரியர்கள் நலன் கருதி நவீன கழிப்பிடம் கட்டப்படவுள்ளது. மேலும் இந்த கூட்டத்தில் 52 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# வெள்ளகோவில் அரசு பள்ளியில் தேசிய ஒற்றுமை நாள் விழா



வெள்ளகோவில், நவ. 2

வெள்ளகோவில் ஊராட்சி ஒன்றியம், லக்கமநாயக்கன்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளியில் தேசிய ஒற்றுமை நாள் விழா நடந்தது. இதற்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் மரியலூயிஸ் தலைமை தாங்கினார். மாணவ மாணவிகள் தேசிய ஒற்றுமை நாள் உறுதிமொழியை ஏற்றுக் கொண்டனர். உறுதிமொழியின்போது இந்திய நாட்டின் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும், பாதுகாப்பையும் பேணுவதற்கு என்னையே உவந்தளிப்பேன் என்றும், இந்த நல்லியல்புகளை எனது நாட்டு மக்களிடையே பரப்புவதற்கு அயராது பாடுபடுவேன் என்றும் உளமாற உறுதியளிக்கிறேன். சர்தார் வல்லபாய் பட்டேல் தொலைநோக்கு பார்வையாலும், நடவடிக்கையாலும் சாத்தியமாக்கப்பட்ட ஒன்றிணைந்த தேசத்தின் நல்லுணர்வினை பேண நான் இந்த உறுதிமொழியை ஏற்கிறேன், எனது நாட்டின் உள் பாதுகாப்பினை உறுதி செய்ய எனது பங்களிப்பினை நல்குவேன் என்றும் உளமாற உறுதியளிக்கிறேன் என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இதில் பட்டதாரி ஆசிரியர் அசோக்குமார் உட்பட ஆசிரியைகள், மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066

# தமிழக அரசின் கோபுரம் சின்னம் நீக்கம்: இந்து சமய அறநிலையத்துறைக்கு சிவசேனா கண்டனம்

திருப்பூர், நவ. 2

சிவசேனா கட்சியின் மாநில இளைஞர் அணி தலைவர் அட்சயா திருமுருக தினேஷ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழக அரசின் முத்திரை சின்னமான கோபுர சின்னம்வேண்டாம்என்று இந்துசமய அறநிலையத்துறை மற்றும் தமிழ்நாடு போக்குவரத்து துறை உள்பட தமிழக அரசு துறைகளில் தற்பொழுது அறிமுகப்படுத்தி உள்ள மொபைல் ஆப்ஸ் லோகோவில்உள்ளமுதல் பக்கத்தில் தமிழக அரசின் கோபுரம் சின்னம் நீக்கப்பட்டு அதனை மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்தவுடன் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் மொபைல் ஆப்ஸ் லோகோவில் அரசின் கோபுரம் சின்னம் மீண்டும் அமைக்கப்பட்டது.

ஆனால் கோபுரத்துக்கு உரிமை பட்ட இந்துசமய அறநிலையத்துறை மட்டும் மொபைல் ஆப்ஸ் லோகோவில் கோபுரம் சின்னம் மீண்டும் அமைக்காமல் கோபுரம் சின்னம் வேண்டாம் என்ற எண்ணத்தில் அலட்சியமாக இருக்கிறது. இதற்காக இந்து சமய அறநிலைய துறையை சிவசேனா வன்மையாக கண்டிக்கிறது.

இந்துக்களின் வழிபாட்டு தலங்களான தமிழகத்தில் உள்ள திருக்கோவில்களுக்கு வருகின்ற வருமானத்தை வைத்து தான் தமிழக அரசே இயங்கி கொண்டு இருக்கிறது.தமிழக அரசு 1949ம் ஆண்டுகளில் இருந்தே கோபுர சின்னத்தை உபயோகித்து வந்த சூழ்நிலையில் திடீரென்றுகோபுரசின்னத்தை அகற்றியது பல்வேறு சந்தேகத்தை உண்டாக்குகிறது.வருங்காலத்தில் தமிழக அரசு துறைகளில் எக்காரணத்தை கொண்டும் கோபுர சின்னத்தை மாற்றக்கூடாது. இந்து சமய அடையாளங்களை அழிக்க நினைக்கும் வகையில் கோபுர சின்னத்தை நீக்க உத்தரவிட்ட இந்து விரோத அதிகாரிகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லையெனில் வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் இச்செய்தி இந்துக்கள் மத்தியில் எதிரொலிக்கும்.ஜனநாயகம் மற்றும் சட்டரீதியாகவும் மிகப்பெரிய போராட்டம் நடத்துவோம் என்பதை இந்த அறிக்கையின் மூலமாக தமிழக அரசுக்கு தெரியப்படுத்தி கொள்கிறேன். இவ்வாறு அந்த அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

# தனியார் நிதி நிறுவனத்தினர் வீட்டை பூட்டியதால் தீக்குளிக்க முயன்ற பெண்

பல்லடம், நவ.2

பல்லடம் அருகே தெற்குப்பாளையம் முத்துநகரை சேர்ந்தவர் செல்வராஜ். இவருடைய மனைவி அருக்காணி (வயது 60). இவர் அங்குள்ள தனியார் நிதி நிறுவனத்தில் வீடு கட்டுவதற்கு கடன் வாங்கினார். அதனை கடந்த 4 வருடமாக மாதந்தோறும் தவணையாக பணம் செலுத்தி வந்தார்.

இந்த நிலையில் இவருடைய கணவர் செல்வராஜ் சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டதால் அவருடைய ஒரு கால் எடுக்கப்பட்டுள்ளது. இதனால் கடந்த 4 மாதங்களாக தவணை தொகை செலுத்தவில்லை.

இந்த நிலையில் தனியார் நிதி நிறுவன ஊழியர்கள் அருக்காணி வீட்டிற்கு வந்தனர். அப்போது அங்கு இருந்த அருக்காணியிடம் கடந்த 4 மாதமாக தவணை தொகை செலுத்தாததால் வீட்டை பூட்டப்போவதாக தெரிவித்தனர்.

இதனால் மன வேதனை அடைந்த அருக்காணி உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி தீக்குளிக்க முயன்றார். உடனே அருகில் இருந்தவர்கள் தடுத்து நிறுத்தி பல்லடம் போலீசாருக்கு தகவல் கொடுத்தனர். இதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் அருக்காணியை மீட்டு பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து பல்லடம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# லாரி மோதி காஜா பட்டன் நிறுவன உரிமையாளர் பலி

திருப்பூர், நவ.2

திருப்பூர்மெயின்ரோடு ரெங்கநாதபுரம் பகுதியை சேர்ந்தவர் குமார் (52). இவர் கொங்கு மெயின் ரோடு இஎஸ்ஐ., மருத்துவமனை அருகே காஜா பட்டன்நிறுவனம்நடத்தி வந்தார். இங்கு நூற்றுக்கும் மேற்பட்டோர் வேலை செய்து வருகிறார்கள். நேற்று இரவு 11 மணி அளவில் திருப்பூர் மாநகராட்சி அருகேநிறுவனம்தொடர்பான வேலையை முடித்துக் கொண்டு டைமண்ட் தியேட்டர் வழியாக தனது மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார்.

அப்போது திடீரென ஒரு வழிபாதையில் திரும்பிய டாரஸ் லாரி ஒன்று குமார் மீது மோதியது. இதில் நிலை தடுமாறி கீழே விழுந்த அவர் மீது லாரியின் பின் சக்கரம் ஏறி இறங்கியதில் குமார் தலை நசுங்கி சம்பவ இடத்திலேயே பலியானார்.இதனைப் பார்த்த லாரி டிரைவர் லாரியை நடுரோட்டில் நிறுத்திவிட்டு தப்பி ஓடி விட்டார்.

இது குறித்து திருப்பூர் மத்திய போலீசார்வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பல்லடம் அருகே 4 பேரை வெட்டிக்கொன்ற வழக்கில் 5 பேர் மீது 800 பக்க குற்றப்பத்திரிகை கோர்ட்டில் தாக்கல்

திருப்பூர், நவ.2

திருப்பூரை அடுத்த பல்லடம் அருகே மாதப்பூர் கள்ளக்கிணறு குரைத்தோட்டம் பகுதியில் வீட்டு முன்பு மது குடிப்பதை தட்டிக்கேட்ட தகராறில் அப்பகுதியை சேர்ந்த மோகன்ராஜ், அவரின் தாயார்புஷ்பவதி, சித்திரத்தினம்மாள், பெரியப்பா மகன் செந்தில்குமார் ஆகியோரை, ஒரு கும்பல் கடந்த செப்டம்பர் மாதம் 3ந்தேதி வெட்டிக்கொலை செய்தது. இதுதொடர்பாக பல்லடம் போலீசார் கொலை வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

மேற்கு மண்டல ஐ.ஜி. பவானீஸ்வரி, கோவை டி.ஐ.ஜி. சரவணசுந்தர் ஆகியோர் மேற்பார்வையில், திருப்பூர் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சாமிநாதன் தலைமையில் 5 தனிப்படைகள் அமைக்கப்பட்டு விசாரணை நடத்தினார்கள். இந்த கொலை சம்பவம் தொடர்பாக திருச்சி மணப்பாறையை சேர்ந்த செல்லமுத்து (வயது 24),

திருநெல்வேலி மாவட்டம் அரியநாயகிபுரத்தை சேர்ந்த அய்யப்பன் (52), வெங்கடேஷ் (27), தேனி உத்தமபாளையத்தை சேர்ந்த சோனை முத்தையா, திருநெல்வேலி மாவட்டம் அரியநாயகி புரத்தை சேர்ந்த செல்வம் என்கிற வெங்கடேஷ் (29) ஆகிய 5 பேரை கைது செய்து குண்டர் சட்டத்தில் சிறையில் அடைத்தனர்.

இந்த வழக்கில் அதிவேகமாக புலன் விசாரணை முடித்து சாட்சிகள் விசாரணை முடிந்து சாட்சியங்களுடன் பல்லடம் துணை போலீஸ் சூப்பிரண்டு சவுமியா, பல்லடம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் 5 பேர் மீதும் 800 பக்கம் கொண்ட குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

# லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி




திருப்பூர், நவ.2

ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரத்தை முன்னிட்டு திருப்பூர் சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் அலகு 2, திருப்பூர் தெற்கு காவல் நிலையம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை ஆகியவை இணைந்து திருப்பூர் மத்திய பேருந்து நிலையத்தில் ஊழல் வேண்டாம் என்று சொல்லுங்கள் என்ற மையகருத்தை வலியுறுத்தி லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. நாட்டு நலப்பணித்திட்டம்அலகு 2 ஒருங்கிணைப்பாளர் மோகன்குமார் முன்னிலை வகித்தார். தெற்கு காவல் உதவி ஆய்வாளர் ரஜினிகாந்த் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை காவல் ஆய்வாளர் சசிலேகா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

காவல் ஆய்வாளர் பேசுகையில், சர்தார் வல்லபாய் படேல் பிறந்த தினத்தை முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும் ஒரு வாரம் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரமாக கடைபிடிக்கப்படுகிறது. லஞ்சம் நாட்டின் பொருளாதாரத்தை பாதிக்கிறது. லஞ்சம் வாங்குவதும் கொடுப்பதும் குற்றம். பெருகி வரும் ஊழலை தடுக்க 04212482816, 8300046708 என்ற எண்களுக்கு தகவல் தர வேண்டும், அவ்வாறு தகவல் தருபவர்களின் ரகசியம் பாதுகாக்கப்படும் என்று பேசினார்.

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை தலைமை காவலர்கள் ராஜா, வெங்கடேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். பிறகு, மாணவ செயலர்கள் சுந்தரம், ராஜபிரபு, விஜய், தினேஷ் கண்ணன், சேர்லின் ஆகியோர் தலைமையில் 60க்கும் மேற்பட்ட நாட்டு நலப்பணித் திட்டம் அலகு2 மாணவ மாணவிகள் கலந்து கொண்டு லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு நடனமாடியும், விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியும், துண்டு பிரசுரங்களை வழங்கியும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதற்கான ஏற்பாடுகளை கல்லூரி முதல்வர் கிருஷ்ணன் செய்திருந்தார்.

# மங்கலத்தில் இலவச கண் பரிசோதனை முகாம்

மங்கலம், நவ.2

திருப்பூர் மாவட்டம்,மங்கலத்தில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக், திருப்பூர்மாவட்டபார்வை இழப்பு தடுப்பு சங்கம் மற்றும் திருப்பூர் தி ஐ பவுண்டேசன் மருத்துவமனை இணைந்து இலவச கண் பரிசோதனை முகாமை நடத்தியது.

இந்த முகாமை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் திருப்பூர் வடக்கு மாவட்ட செயலாளர் மங்கலம் இப்ராஹிம் துவக்கி வைத்தார் .இந்த முகாமிற்கு மங்கலம் ஊராட்சி மன்றத்தலைவர் எஸ்.எம். பி.மூர்த்தி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் திருப்பூர் வடக்கு மாவட்ட தலைவர்சையது முஸ்தபா, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எபிசியண்ட் மணி,மங்கலம் ஊராட்சி மன்ற துணைத்தலைவர் தாஹாநசீர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் இந்த முகாமில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மங்கலம் நகர தலைவர் பி.ஏ.சாதிக் அலி,இளைஞரணி மாநில அமைப்புக்குழு உறுப்பினர் சிராஜ்தீன், மங்கலம் நகர செயலாளர் முஹம்மது ரபி, மாநில பொதுக் குழு உறுப்பினர் அபுதாஹிர், மாவட்ட துணைச்செயலாளர் மலங்ஷா மற்றும் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.இந்த முகாமில் 200க்கும் மேற்பட்ட பயனாளிகள் கலந்து கொண்டனர்.

# பாராளுமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெறும்: கி.வீரமணி பேச்சு



திருப்பூர், நவ. 2

திருப்பூர் கொடிக்கம்பம் பகுதியில் திராவிடர் கழகம் சார்பாக குலத்தொழிலை திணிக்கும் விஸ்வகர்மா யோஜனாவா? என்ற தலைப்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் திராவிடர் கழக தலைவர் கி. வீரமணி பேசியதாவது:

இந்தஆட்சியில்ரூ.1200 கோடி செலவில் காலை சிற்றுண்டி தரப்படுகிறது. முந்தைய ஆட்சிகளில் கோவில்களில் புளியோதரை, தயிர் சாதம் தான் தரப்பட்டது. இப்பொழுது தான் குழந்தைகள் காலை சிற்றுண்டி சாப்பிடுகிறார்கள்.

முன்பு சமஸ்கிருதம் படித்தால் மட்டுமே டாக்டர் என இருந்தது. அது ஒழிக்கப்பட்டது. ஆனால் தற்போது நீட் தேர்வினால் ஒடுக்கப்பட்டவர்கள் யாரும் மருத்துவராக முடியவில்லை. புதிய கல்வி கொள்கையினால் 8, 10, 12 ஆகிய வகுப்புகளுக்கு பொதுத்தேர்வுகள் வைக்கப்படுகிறது. இவ்வளவு தேர்வு எழுதி மீண்டும் க்யூட் தேர்வில் பாஸ் ஆக வேண்டிய கட்டாயம் உள்ளது. நீட் மற்றும்கியூட்டை மியூட் செய்வதற்குத்தான் நாங்கள் உள்ளோம்.

சந்திராயன் ஆராய்ச்சியில் உள்ள விஞ்ஞானிகள் அனைவரும் குலதொழில் கல்வி திட்டம் ஒழிந்த பின் விஞ்ஞானி ஆகியவர்கள். தாய் வீட்டு சீதனம் போல மாதம் ஆயிரம் பணம் செலுத்தப்படுகிறது. பெண்களுக்கு அது உதவித்தொகை இல்லை. உரிமை தொகையாக வழங்கப்படுகிறது.

மோடி ஆட்சியில் நாள்தோறும் போராட்டங்கள் நடைபெறுகிறது. 5மாநில தேர்தலில்வெற்றிவாய்ப்பு பா.ஜ.க.வுக்கு இல்லை என்று கருத்து கணிப்புகள் கூறுகின்றன. அனைவரும் ஒன்று சேர்ந்ததால் இந்தியாவை நாம் காப்பாற்றுகிறோம். அவர்கள் இந்தியா என்று கூறுவதற்கே பயப்படுகிறார்கள். இந்தியா என்கிற பெயர் அனைவரையும் இணைக்கிறது. இந்தியா கூட்டணி பாராளுமன்றதேர்தலில்வெற்றி பெற்று ஆட்சியை பிடிக்கும். மோடி திரிசூலத்தை கையில் வைத்துள்ளார். ஒன்று வருமானவரித் துறை, மற்றொன்று சி.பி.ஐ., 3வது அமலாக்கத்துறை. இது அனைத்தும் மக்கள் முன்பு எடுபடாது.உங்களிடம்அதானி, அம்பானி உள்ளார்கள். மக்கள் எங்களோடு உள்ளார்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் திருப்பூர் மாநகராட்சி மேயர் தினேஷ்குமார் மற்றும் தி.மு.க.,ம.தி.மு.க., விடுதலை சிறுத்தை மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# காங்கயத்தில் 7 கிலோ பிளாஸ்டிக் பைகள் பறிமுதல்: நகராட்சி மீண்டும் அதிரடி

காங்கயம், நவ.2

காங்கயம் நகராட்சியில் பிளாஸ்டிக் பைகளை விற்பனை செய்வதற்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது. பிளாஸ்டிக் பைகள் விற்பனை செய்தல் மற்றும் கொண்டு செல்லுதல் உள்ளிட்ட குற்றங்களுக்கு அபராதம் விதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதன்படி ரூ.1000 முதல் ரூ.1 லட்சம் அபராதம் விதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டு இருந்தது.

காங்கயம் நகர வணிக நிறுவனங்களில் பிளாஸ்டிக் பைகள் பயன்படுத்தப்படுவதாக நகராட்சி அலுவலகத்துக்கு தொடர்ந்து புகார்கள் வந்தன. இந்நிலையில் நேற்று காங்கயம் நகராட்சி சுகாதார ஆய்வாளர் சரவணன், நகராட்சி வருவாய் அலுவலர் ஆனந்தராஜன் ஆகியோர் தலைமையில் காங்கயம் பஸ் நிலையம், கடைவீதி உள்படபல பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டார். 20 கடைகளில் 7 கிலோ பிளாஸ்டிக் பைகள் கண்டறியப்பட்டு அவை பறிமுதல் செய்யப்பட்டன.

மேலும் இந்த நெகிழிப்பை பயன்படுத்தியதற்காக 13 கடைகளுக்கு ரூ.3500 சம்பவ இடத்திலேயே அபராதம் விதிக்கப்பட்டது. இந்த ஆய்வின் போது நகராட்சி ஊழியர்கள் உடனிருந்தனர். காங்கயம் நகரப் பகுதியில் 180 கிலோ நெகிழிப் பைகள் பறிமுதல் செய்யப்பட்டது குறிப்பிடதக்கதாகும்.

# திருப்பூர் அரசு பள்ளி வளாகத்தில் கொலை செய்யப்பட்ட பெண்ணின் அடையாளம் தெரிந்தது போதை தகராறில் கொலை செய்யப்பட்டாரா? என போலீசார் விசாரணை

திருப்பூர்,நவ.2

திருப்பூர், தாராபுரம் ரோடு,கே.செட்டிபாளையத்தில் அரசு மேல்நிலைப்பள்ளி உள்ளது. இந்நிலையில், அந்த பள்ளியில் புதியதாக கட்டிட கட்டுமான பணிகள் நடைபெற்று வந்தது. தற்சமயம் அந்த கட்டிட பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த கட்டிட பணி நடைபெற்ற போது பணியாளர்கள் தங்குவதற்காக அங்கு தகரத்தினால் ஆன செட் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பயன்பாடில்லாத அந்த தகர செட் பகுதியில் கடுமையான துர்நாற்றம் வீசியது. கடந்த 27 ந் தேதி அந்த தகர செட் உள்ள பகுதிக்கு சிலர் சென்று பார்த்துள்ளனர். அப்போது அங்கு 40 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் நிர்வாணமாக அழுகிய நிலையில் இறந்து கிடந்தார்.

இதனையடுத்து பள்ளி ஆசிரியர்கள் நல்லூர் போலீசாருக்கு தகவல் கொடுத்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த நல்லூர் போலீசார் உடலை கைபற்றி பிரேத பரிசோதனைக்காக திருப்பூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து நல்லூர் போலீசார் வழக்கு பதிவு விசாரணையை தொடங்கினர். இறந்த பெண் யார்? எந்த ஊரை சேர்ந்தவர்? என்பது குறித்து விசாரணை நடத்தினர். இறந்த பெண் நிர்வாணமாக இருந்ததால் கற்பழித்து கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்தது. உடல் அழுகிய நிலையில் இருந்ததால் இறந்த பெண்ணை அடையாளம் காண முடியாமல் போலீசார் திணறினர். மேலும் அந்த பெண்ணை கொன்ற கொலையாளிகள் யார் என்பதை கண்டுபிடிக்க தனிப்படை அமைக்கப்பட்டது.

தனிப்படையினர்தீவிர விசாரணை நடத்தினர். மேலும் நுண்ணறிவு பிரிவு போலீசாரும் அந்த பெண் குறித்து ரகசிய விசாரணையில் ஈடுபட்டனர்.

இந்தநிலையில் கொலை செய்யப்பட்ட பெண்ணின் அடையாளம் தெரிந்தது. அவர் திருப்பூர் வீரபாண்டி பகுதியை சேர்ந்த கவிதா (வயது 46) என்பது தெரியவந்தது. இவருக்கு திருமணமாகி 2 குழந்தைகள் உள்ளனர். முதல் கணவரை பிரிந்து 2வது கணவருடன் வசித்து வந்துள்ளார்.

மேலும் கட்டிட வேலை, வீட்டு வேலை உள்ளிட்ட வேலைகளை செய்து வந்துள்ளார். அவருக்கு மது அருந்தும் பழக்கம் இருந்துள்ளது. இதனால் ஆண் நண்பர்களுடன் மது அருந்திய போது ஏற்பட்ட தகராறில் கவிதா கொலை செய்யப்பட்டாரா அல்லது வேறு ஏதேனும் காரணமா என போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருமுருகன்பூண்டி நகராட்சியில் தனியாரிடம் வழங்கப்பட்ட தூய்மைப்பணி ஒப்பந்தம் ரத்து: நகர்மன்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றம்




அவிநாசி, நவ. 2

அவிநாசி வட்டம், திருமுருகன்பூண்டி நகராட்சியில் 100க்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இந்நிலையில், கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஒப்பந்தம் மூலம் தனியாரிடம் தூய்மைப் பணி வழங்கப்பட்டது. தற்போது, ஒப்பந்ததாரர் மூலம் தூய்மைப் பணி நடைபெற்று வருகிறது.

ஆனால், தனியார் ஒப்பந்ததாரர் குப்பைகளை மட்டுமே அகற்றுவதால், நகராட்சி முழுவதும் கழிவுநீர்க் கால்வாய்கள் தூர்வாரப்படாமல் அடைப்பு ஏற்பட்டு, சுகாதார சீர்கேடு ஏற்பட்டு நோய்த் தொற்று பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

திருமுருகன்பூண்டி நகராட்சியில் 27 வார்டுகள் உள்ள நிலையில், நிரந்தர தூய்மைப் பணியாளர்களாக 8 பேர் மட்டுமே உள்ளனர். இவர்களும் திடக்கழிவு மேலாண்மை உள்ளிட்ட பணிகளில் ஈடுபட்டுள்ளதால், தூய்மைப் பணி முற்றிலும் முடக்கியுள்ளது. எனவே தனியாரிடம் வழங்கப்பட்ட தூய்மைப்பணி ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும் என நகர்மன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். இந்நிலையில் திருமுருகன்பூண்டி நகராட்சி கூட்டம் நடைபெற்றது. கூட்டத்துக்கு நகர் மன்றத்தலைவர் குமார் தலைமை வகித்தார். ஆணையர் ஆண்டவன், துணைத்தலைவர்ராஜேஸ்வரி ஆகியோர்முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் மன்ற உறுப்பினர்கள் கோரிக்கைக்கு ஏற்ப தனியாரிடம் வழங்கப்பட்ட தூய்மைப்பணி ஒப்பந்தத்தை ரத்து செய்ய வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதைத்தொடர்ந்து குடிநீர் வசதி, தெருவிளக்கு, சாலை வசதி, உயர்மின் விளக்கு, பொதுக் கழிப்பிடம், சாக்கடை கால்வாய் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை நிறைவேற்றக் கோரி நகர் மன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

நகர்மன்ற உறுப்பினர்களின் கோரிக்கை ஆய்வு மேற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஆணையர் ஆண்டவன் தெரிவித்தார். நிறைவாக மன்ற பொருள் வாசிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நமது தின கனி

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 02.11.2023



# நீங்கள் ஆணையிட்டால் நான் தயார் விஜய்

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில், லலித் தயாரிப்பில், விஜய், த்ரிஷா, சஞ்சய் தத், அர்ஜுன், கவுதம் மேனன் உள்ளிட்ட பலர் நடித்த 'லியோ' திரைப்படம் கடந்த 19 ந்தேதி திரையரங்குகளில் வெளியானது. பல்வேறு சர்ச்சைகளை தாண்டி வெளியான இந்த படம் வசூல் ரீதியாகவும், விமர்சன ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. வெளியான முதல் நாளில் மட்டும் உலகம் முழுவதும் ரூ.148 கோடி வசூல் செய்து சர்வதேச அளவில் முதல் நாளில் அதிக வசூல் செய்த தமிழ்ப் படம் என்ற சாதனையை படைத்தது. மேலும் முதல் வாரத்தில் 'லியோ' திரைப்படம் உலகம் முழுவதும் 461 கோடி ரூபாய்க்கு மேல் வசூலித்ததாக படக்குழு அறிவித்தது. இந்நிலையில் இந்த வெற்றியை கொண்டாடும் விதமாக, இன்று சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் பிரமாண்ட விழா நடைபெற்றது. லியோ படத்தின் வெற்றி விழாவில் பேசிய தயாரிப்பாளர் லலித் குமார், "சிறப்புக் காட்சிக்கு அனுமதி கொடுத்ததுக்குத் தமிழக அரசுக்கு நன்றி. 'மாஸ்டர்' படம் ஓடிடில ரிலீஸ் பண்ண பெரிய ஆபர் வந்தது. ஆனால், விஜய் சார், என் படம் தியேட்டர்லதான் வரணும்னு சொன்னாரு. 'படம் மிகப்பெரிய வெற்றி பெற்ற பிறகு நடத்தலாம், நான் வர்றேன்' என்றார் விஜய்" என்று கூறினார். விழாவில் பேசிய நடிகை திரிஷா, " எல்லோருக்கும் முதலில் நான் நன்றி சொல்ல விரும்புகிறேன். இதற்கு ரசிகர்கள் தான் காரணம். லியோ ஒரு சுற்றுலா போல இருந்தது. ஒரு ஸ்கூலில் படித்த நண்பனை பார்த்தால் எப்படி இருக்குமோ அப்படி தான் எனக்கு விஜய்யை பார்க்கும் போது இதில் இருந்தது. சினிமா துறையில் நான் அதிக வருடங்களாக நட்பில் இருக்கும் நபர் விஜய் தான். விஜய்யிடம் எந்த மாற்றமும் இல்லை. நான் பல வெற்றி இயக்குநர்கள் உடன் வேலை பார்த்து இருக்கிறேன். அதில் சிலர் மட்டும் தான் அவர்கள் அவர்களாவே இருப்பர். அதில் ஒருவராக லோகேஷ் இருக்கிறார். அவர் என்னிடம் சில வருடங்களுக்கு முன்னர் இந்த கதையை சொன்னார். அவர் சொன்ன படியே எடுத்தார். எந்த மாற்றமும் செய்யவில்லை. நல்ல வேளை அவர் என்னை படத்தில் கொல்லவில்லை. அவரிடம் அப்படி போடு போல ஒரு பாட்டு கேட்டேன்" என்று அவர் கூறினார். விழாவில் பேசிய நடிகர் அர்ஜூன், விஜய்யிடம் ஒரு கேள்வி கேட்டார். விஜய்யாக இருப்பது கஷ்டமா? ஈசியா? என்று கேட்டார். அதற்கு விஜய், வெளியே இருந்து பார்ப்பதற்கு கஷ்டமா தெரியும், ஆனா எனக்கு ரொம்ப ஈசி. ஏனா ரசிகர்கள் என்னுடன் இருக்கிறார்கள்" என்று கூறினார்.

விழாவில் பேசிய இயக்குநர் லோகேஷ் கனகராஜ், "எனக்கு இரண்டாவது வாய்ப்பு கொடுத்த விஜய் அண்ணாவுக்கு நன்றி. லவ் யூ. பூஜைக்குப் பிறகு இந்தப் படம் தொடர்பாக எந்த நிகழ்ச்சியும் நடக்கவில்லை. முதல் மேடை, வெற்றி விழா மேடை என்பது மகிழ்ச்சியாக உள்ளது. நாங்கள் எந்த புரமோஷனும் படத்துக்கு செய்யவில்லை. இசை வெளியீட்டு விழா நடக்காதது எனக்கும் வருத்தம்தான். கடைசி 20 நாட்கள் எடிட்டர் பிலோமின் ராஜ் ஸ்டூடியோவிலேயே தங்கியிருந்த எனது உதவி இயக்குநர்கள் 18 பேரை மேடைக்கு அழைக்கிறேன் என்று கூறி அவர்களை அழைத்து கவுரப்படுத்தினார்.

தொடர்ந்து பேசிய அவர், "இயக்குநர் வெற்றிமாறனை எனது 23 படங்களில் வில்லனாக நடிக்க வைக்க முயற்சி செய்தேன். ஆனால், அவர் அதை மறுத்துவிட்டார். அவரை நடிகராக மாற்ற வேண்டும் என ஆசை. விரைவில் அப்படி மாற்றுவேன் என நினைக்கிறேன். படத்தின் இறுதி வெர்ஷனை பார்த்துவிட்டு விஜய் அண்ணா என்னை கட்டி அணைத்துமுத்தமிட்டார். மிகவும்சந்தோஷமாகஇருந்தது" என்றார்.

# நிறைமாத கர்ப்பம்.. பிரபல மலையாள டிவி நடிகை திடீர் மரணம்: ரசிகர்கள் அதிர்ச்சி



மலையாள சின்னத்திரை உலகில் பிரபலமான நடிகையாக வலம் வந்தவர் டாக்டர் பிரியா (வயது 35). நிறைமாத கர்ப்பமாக இருந்த இவர், மருத்துவமனைக்கு சென்று வழக்கமான பரிசோதனைகள் செய்து வந்தார். இந்நிலையில் அவருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. உடனடியாக அவரை மருத்துவமனையில் சேர்த்தனர். ஆனால் சிகிச்சை பலனின்றி இன்று உயிரிழந்தார்.

அவரது வயிற்றில் இருந்த 8 மாத குழந்தையை டாக்டர்கள் காப்பாற்றினர். தற்போது குழந்தை ஐசியுவில் வைக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது.


டாக்டர் பிரியா மறைவு குறித்த செய்தியை, நடிகர் கிஷோர் சத்யா தனது சமூக வலைதள பக்கத்தில் பகிர்ந்துள்ளார்.

டாக்டர் பிரியாவின் மறைவு அவரது குடும்பத்தினரை சோகத்தில் ஆழ்த்தி உள்ளது. உறவினர்கள், நண்பர்கள், திரையுலகினர் என பலரும் ஆறுதல் கூறிவருகின்றனர்.

டாக்டர் பிரியா, 'கருத்தமுத்து' தொடரில் நடித்து பிரபலமானார். ஆனால் திருமணத்திற்குப் பிறகு நடிக்காமல் இருந்தார். மருத்துவரான அவர் திருவனந்தபுரத்தில் உள்ள மருத்துவமனையில் பணியாற்றினார். மருத்துவ மேற்படிப்பு (எம்.டி.) படித்து வந்ததாக தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு, நடிகை ரெஞ்சுஷா மேனன் மரணம் அடைந்தார். இந்த அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்குள் டிவி நடிகை பிரியா உயிரிழந்திருப்பது ரசிகர்களை மேலும் அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

# மிரட்டலான லுக்கில் விக்ரம்.. இணையத்தை தெறிக்கவிடும் 'தங்கலான்' டீசர்




இயக்குனர் பா.இரஞ்சித் இயக்கத்தில்விக்ரம்நடிப்பில் உருவாகியுள்ள திரைப்படம் 'தங்கலான்'. இந்த படத்தில் பார்வதி, மாளவிகா மோகனன், பசுபதி, ஹரி, பிரிட்டிஷ் நடிகர் டேனியல் கால்டகிரோன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். ஞானவேல் ராஜா தயாரித்துள்ள இந்த படத்துக்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ளார்.

இந்த படம் கர்நாடக மாநிலத்தில் உள்ள கே.ஜி.எப். குறித்த கதை என்று இயக்குனர் பா.இரஞ்சித் தெரிவித்திருந்தார். இதனால் இந்த படம் ரசிகர்களிடையே மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் இந்த படத்தின் டீசர் வெளியாகி உள்ளது. டீசரிலிருந்து விக்ரமின் தோற்றம் மற்றும் மிரட்டலான நடிப்பு உள்ளிட்டவை ரசிகர்களுக்கு நல்ல விருந்தாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த டீசர் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது. 'தங்கலான்' திரைப்படம் அடுத்த ஆண்டு ஜனவரி 26ந்தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

# விக்ரம் பிரபு நடித்துள்ள 'ரெய்டு' திரைப்படம் தீபாவளிக்கு வெளியாகும்: படக்குழு அறிவிப்பு




அறிமுக இயக்குனர் கார்த்தி இயக்கத்தில் நடிகர் விக்ரம் பிரபு நடித்துள்ள திரைப்படம் 'ரெய்டு'. இந்த திரைப்படம் கன்னடத்தில் சிவராஜ்குமார், தனஞ்சயா நடிப்பில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்ற 'டகரு' படத்தின் ரீமேக்காகும். இந்த படத்தில் விக்ரம் பிரபு, ஸ்ரீ திவ்யா, அனந்திகா ஆகியோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர். சாம்.சி.எஸ் இசையமைத்துள்ள இந்த படத்திற்கு கதிரவன் ஒளிப்பதிவு செய்துள்ளார். இறுகப்பற்று திரைப்படத்தில் விக்ரம் பிரபுவுக்கு பாராட்டு குவிந்த நிலையில், ரெய்டு திரைப்படமும் நல்ல வரவேற்பை பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் இந்த திரைப்படம் வரும்தீபாவளிக்கு வெளியாகும் என அறிவிப்பு வெளியாகி உள்ளது. இந்த தகவலை நடிகர் விக்ரம் பிரபு தனது எக்ஸ் வலைதளப்பக்கத்தில் படத்தின் புதிய போஸ்டரை வெளியிட்டு உறுதிப்படுத்தி உள்ளார்.

# நானி நடிக்கும் 'ஹாய் நான்னா' படத்தின் 'மையல்' பாடலின் புரோமோ வீடியோ வெளியீடு



இயக்குனர் சவுரவ் இயக்கத்தில் நானி நடிக்கும் திரைப்படம் 'ஹாய் நான்னா'. இந்த படத்தில் நானிக்கு ஜோடியாக மிருணாள் தாகூர் நடிக்கிறார். அப்பா மகள் உறவை மையமாக வைத்து உருவாகும் இந்த படத்துக்கு ஹசம் அப்துல் இசையமைக்கிறார். வைரா எண்டர்டெயின்மெண்ட் நிறுவனம் இந்த படத்தை தயாரிக்கிறது.

இந்த படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் மற்றும் இரண்டு பாடல்கள் சமீபத்தில் வெளியாகி கவனம் பெற்றது. இந்த படத்தின் மூன்றாவது பாடலான 'மையல்' பாடலின் லிரிக் வீடியோ வருகிற 4ம் தேதி வெளியாகவுள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. இந்த நிலையில், இந்த பாடலின் புரோமோ வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது. இந்த வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

# ஆக்ஷன் திரில்லராக உருவாகியுள்ள ரூல் நம்பர் 4.. ரிலீஸ் எப்போது தெரியுமா?



இயக்குனர் பாஸர் இயக்கத்தில் உருவாகியுள்ள திரைப்படம் 'ரூல் நம்பர் 4'. இந்த படத்தில் ஏ.கே. பிரதீஸ் கிருஷ்ணா கதாநாயகனாக நடித்துள்ளார். இவருக்குஜோடியாகஸ்ரீகோபிகா நடித்துள்ளார். மேலும், மோகன் வைத்யா, ஜீவா ரவி, கலா கல்யாணி, பிர்லா போஸ், கலா பிரதீப் மற்றும் பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

YSIMY புரொடக்ஷன்ஸ் தயாரித்துள்ள இப்படத்திற்கு தீரஜ் சுகுமாறன் பின்னணி இசையமைத்துள்ளார். படத்தில் இடம்பெறும் ஐந்து பாடல்களுக்கு கெவின் டெகாஸ்டா இசையமைத்துள்ளார். டேவிட் ஜான் ஒளிப்பதிவு செய்துள்ளார். விறுவிறுப்பான கதைக்களம், அதிரடி ஆக்ஷன் என உருவாகியுள்ள இப்படம் வரும் நவம்பர் 3ம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதனை படக்குழு போஸ்டரை பகிர்ந்து அறிவித்துள்ளது.

# சமீபத்தில் ஜப்பான் படத்தின் ட்ரைலர் ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றது




இயக்குனர் ராஜு முருகன் இயக்கத்தில் நடிகர் கார்த்தி கதாநாயகனாக நடித்துள்ள திரைப்படம் 'ஜப்பான்'. இதில் கதாநாயகியாக 'துப்பறிவாளன்', 'நம்மவீட்டு பிள்ளை' போன்ற படங்களில் நடித்த அனு இமானுவேல் நடித்துள்ளார். ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் தயாரித்துள்ள இந்த படத்துக்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ளார்.

இந்த படத்தின் டீசர் மற்றும் முதல் பாடல் வெளியாகி கவனம் பெற்றது. 'ஜப்பான்' திரைப்படம் தீபாவளியன்று திரையரங்குகளில் வெளியாகவுள்ள நிலையில், இப்படத்தின் போஸ்ட் புரொடக்சன் பணிகளில் படக்குழு தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இந்த நிலையில் இந்த படத்தின் டிரைலர் கடந்த 28ம் தேதி வெளியாகி ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றுள்ளது.

இந்நிலையில் இந்த படத்தின் பாடல் ஒன்று வெளியாகியுள்ளது. சொட்டாங்கல்லா எனும் அந்த பாடல் ரசிகர்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்று வருகிறது.

# ஐ.எஸ்.எல். கால்பந்து: ஜாம்ஷெட்பூர் அணியை வீழ்த்தி மோகன் பகான் வெற்றி



12 அணிகள் இடையிலான 10வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.) கால்பந்து போட்டி இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இந்த தொடரில் ஜாம்ஷெட்பூரில் இன்று நடைபெற்ற போட்டியில் ஜாம்ஷெட்பூர்மோகன் பகான் அணிகள் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த போட்டியில் ஜாம்ஷெட்பூர் அணி சார்பில் முகமது ஆட்டத்தின் 6வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். ஸ்டீவ் ஆட்டத்தின் 86வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார். மோகன் பகான் அணி சார்பில் அர்மண்டோ ஆட்டத்தின் 29வது நிமிடத்திலும் லிஸ்டன் 48வது நிமிடத்திலும் கியான் 80வது நிமிடத்திலும் தலா ஒரு கோல் அடித்தனர். இந்த நிலையில் ஆட்டநேர முடிவில் மோகன்பகான் அணி 32 என்ற கோல் கணக்கில் ஜாம்ஷெட்பூர் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.

# பாரீஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ்; டொமினிக் தீம் 2வது சுற்றுக்கு முன்னேற்றம்



பாரீஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடர் கடந்த மாதம் 28ஆம் தேதி தொடங்கி வரும் 5ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இதில் பல முன்னணி வீரர்கள் பங்கேற்றுள்ளனர்.

இதில் நடந்த முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் ஆஸ்திரிய நாட்டை சேர்ந்த டொமினிக் தீம், சுவீஸ் நாட்டை சேர்ந்த வாவ்ரிங்கா உடன் மோதினார். விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதல் செட்டை இழந்த தீம் , பின்னர் அதிரடியாக விளையாடி அடுத்த இரண்டு செட்களை கைப்பற்றி வெற்றி பெற்றார்.

2 மணி நேரம் 31 நிமிடங்கள் நடந்த இந்த ஆட்டத்தில் தீம் 36, 63 மற்றும் 75 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று 2வது சுற்றுக்கு முன்னேறியுள்ளார். தீம் தனது அடுத்த ஆட்டத்தில் நடப்பு

# ஆசிய சாம்பியன்ஸ் ஆக்கி: 4வது வெற்றியை பதிவு செய்து அசத்திய இந்தியா




பெண்களுக்கான 7வது ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஆக்கி போட்டி ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சியில் நடந்து வருகிறது. இதில் நேற்றிரவு நடந்த ஆட்டம் ஒன்றில் இந்திய அணி 21 என்ற கோல் கணக்கில் நடப்பு சாம்பியன் ஜப்பானை வீழ்த்தியது.

இந்திய அணியில், நவ்னீத் கவுர் (31வது நிமிடம்) சங்கீதா குமாரி (47வது நிமிடம்) கோல் போட்டனர். தொடர்ந்து 4வது வெற்றியை சுவைத்த இந்திய அணி 12 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. ஜப்பான் 3 வெற்றி, ஒரு தோல்வி என்று 9 புள்ளிகளுடன் 2வது இடத்தில் இருக்கிறது.

இந்திய அணி ஏற்கனவே அரைஇறுதியை எட்டிவிட்டநிலையில், தனது கடைசி லீக் ஆட்டத்தில் தென்கொரியாவை நாளை சந்திக்க உள்ளது.

# ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டி; இந்தியாவுக்கு தங்க பதக்கம்



தென்கொரியாவின் சாங்வொன் நகரில், 2023ம் ஆண்டிற்கான ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டிகள் நடந்து வருகின்றன.

இதில், இந்தியா சார்பில் கலந்து கொண்ட வீரர் ஐஷ்வரி பிரதாப் சிங் தோமர், ஆடவருக்கான 50 மீட்டர் ரைபிள் 3 பொஷிசன் பிரிவில் இறுதி சுற்று போட்டியில் 463.5 புள்ளிகளை சேர்த்து தங்க பதக்கம் தட்டி சென்றுள்ளார்.

சீனாவின் தியான் ஜியாமிங் வெள்ளி பதக்கமும், சக வீரரான டூ லின்ஷு வெண்கல பதக்கமும் வென்றுள்ளனர்.

# 'ஆசிய கோப்பை தோல்வி எங்களது அணியின் வீரர்களுக்கு உத்வேகத்தை அளிக்கும்' இலங்கை பயிற்சியாளர்

13வது உலகக்கோப்பை கிரிக்கெட் திருவிழா முக்கியமான கட்டத்தை எட்டியுள்ளது. 31 ஆட்டங்கள் நிறைவடைந்துள்ளன. இன்னும் 14 லீக் ஆட்டங்கள் மட்டுமே எஞ்சியுள்ளன. ஆனால் இதுவரை எந்த அணியும் அரைஇறுதியை எட்டவில்லை. இதில் நாளை நடைபெற உள்ள 33வது லீக் ஆட்டத்தில் இந்தியா மற்றும்இலங்கைஅணிகள்மோதஉள்ளன.இந்நிலையில் ஆசிய கோப்பை இறுதிப்போட்டியில் சந்தித்த தோல்வியை மறக்கவில்லை என்று இலங்கை பயிற்சியாளர் கிறிஸ் சில்வர்வுட் தெரிவித்துள்ளார். இருப்பினும் இம்முறை அதையே உத்வேகமாக எடுத்துக்கொண்டு இந்த ஆட்டத்தில் தங்களுடைய அணியின்வீரர்கள்இந்தியாவைசாய்க்கபோராடுவார்கள் என்று கூறியுள்ளார். இது குறித்து செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் பேசியது பின்வருமாறு; "ஆசிய கோப்பையில் சந்தித்த அந்த தோல்வி எங்களுடைய அணியில் சில உத்வேகத்தை அளிக்கும் என்று நம்புகிறேன். குறிப்பாக ஆசிய கோப்பையில் சந்தித்த தோல்வி எங்களுடைய வீரர்களுக்கு இந்த ஆட்டத்தில் போராடுவதற்கான உத்வேகத்தை கொடுக்கும் என்று நம்புகிறேன். இந்த தொடரில் இந்திய அணி சிறப்பான கிரிக்கெட்டை விளையாடி வருகிறார்கள். ஆனால் எங்களுடைய வீரர்கள் சிறந்தவர்கள் என்பதை இந்தியாவுக்கு காண்பிப்பதற்கு இது நல்ல வாய்ப்பு என்று நான் கருதுகிறேன்" என்று கூறியுள்ளார். இந்தியாவுக்கு எதிரான இந்த ஆட்டத்தில் இலங்கை




Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.